

சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழகம், விவேகானந்தா அரங்கில் நேற்று (16.07.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் புத்தாக்க கண்டுபிடிப்பு கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் இயக்குநர் இரா. அம்பலவாணன், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் துணை இயக்குநர் நா. கமலக்கண்ணன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை சார்பாக ரூ. 3.33 கோடி மதிப்பீட்டில் புதிய மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக கட்டடப் பணிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அடிக்கல் வைத்து பணிகளை துவக்கினர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தேவன், உதவி செயற்பொறியாளர் மனோகரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், உதவி இயக்குனர் (நகர்ப்புற ஊரமைப்பு) சஹானா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## செங்கல்பட்டு - வண்டலூர் - மண்ணிவாக்கம் பெரி தொழில்நுட்ப கல்லூரியில்

# பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.

செங்கல்பட்டு, ஜுலை 17-

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், மண்ணிவாக்கம் பெரி தொழில்நுட்ப கல்லூரியில் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு (SLAS 2025) ஆய்வுக் கூட்டம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நேற்று (16.07.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வி துறை அமைச்சர் பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பள்ளிக் கல்வித் துறையில் மாணவர்களின் கற்றல் அடைவு குறித்து மாநில திட்டக்குழு கற்றல் அடைவு அறிக்கையினை வெளியிட்டுள்ளது. அதனடிப்படையில் மாவட்டந்தோறும் தலைமையாசிரியர்கள் மற்றும் கல்வித்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டு வருகிறது. நம்முடைய தலைமையாசிரியர்களில் நான் மிகவும் பெருமையாக நான் பார்க்க கூடியது செங்கல்பட்டு மாவட்டமே. ஏனெனில் இவர்களுக்கு கற்றல் அடைவு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள நிலையை ஒத்துக்கொள்ளும் பக்குவம் இருக்கிறது.

குறைபாடுகளை சரி செய்து கொண்டோம் என்பது இருந்தாலே போதும். எதிர்கால திட்டமிடுதல் சிறப்பாக இருக்கும். தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு விதத்தில் செயல்படும் அதே போன்று மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சியும் ஒவ்வொரு ஒன்றியமும் ஒவ்வொரு விதத்தில் செயல்படும். ஒவ்வொரு ஒன்றியத்தில் இருக்கின்ற ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஒவ்வொரு விதத்தில் செயல்படும். ஒரு பள்ளிக்கூடத்தில் இருக்கின்ற ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு விதத்தில் செயல்படுவார்கள்.

ஆசிரியர்கள் பாடப்புத்தகத்தில் உள்ள பாடங்களை நடத்தி முடித்து விட்டு தன்னுடைய வேலை முடிந்ததாக கருதாமல் மாணவர்கள் புரிந்துகொள்கிறார்களா? புரிதல் தன்மை இருக்கின்றதா? மாணவர்களுக்கு இருக்கின்றதா என்பதை அறிந்து கொள்ள வேண்டும் கற்றலும் கற்பித்தலும் மகிழ்ச்சியாக அமைந்திட வேண்டும். அப்பொழுது தான் நாம் எதிர்பார்க்க கூடிய தேர்வு முடிவுகள் நமக்கு கிடைக்கும்.

ஒரு தலைமை ஆசிரியர் வாசிப்பு இயக்கம் மூலமாக படிக்க சொல்லுகிறோம். இன்னும் மேம்படுத்துவதற்க்கு இலகுவாக இருக்கும் என தெரிவித்திருந்தது மகிழ்ச்சியான செய்தி. வாசிப்பு இயக்கம் நடத்தும் போது, இன்றைக்கு படித்த 15 புது வார்த்தைகள் நீ உன்னுடைய நண்பர்களிடம் எடுத்து சொல்லு என ஊக்கப்படுத்துங்கள். நாங்கள் திட்டங்களை வகுத்துத் தந்தாலும், வகுப்பறையில் இருக்கின்ற ஒவ்வொரு மாணவச்செல்வங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது ஆசிரியரான உங்களுக்கு தான் தெரியும்.

இங்கு பேசிய ஆசிரியர்கள் கூறும்போது தமிழ்நாடு அரசால் காலை உணவு திட்டத்திலிருந்து தொடங்கி அனைத்து திட்டங்களும் மாணவ மாணவிகளுக்காக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. எண்ணும் எழுத்தும் திட்டம் மூலமாக தொடக்கப் பள்ளியில் இருந்து குழந்தைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறார்கள். இதேபோன்று ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை செயல்பட்டு வந்த எண்ணும் எழுத்தும் திட்டம் தற்போது ஐந்தாம் வகுப்பு வரை மேம்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் சிரமமாக இருக்கும் பாடத்திட்டங்களை தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர்கள் மிகவும் எளிமையாக புரிந்து கொள்ளும் வண்ணம் எடுத்துரைக்கப்பட்டு வருவதை யூடியுப் வீடியோக்களில் காணலாம். இவற்றை மணற்கேணி ஆப் வாயிலாக நாம் காணலாம். ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு திறன் என்ற திட்டத்தை தமிழக அரசு சாத்தியப்படுத்தியுள்ளது. அதேபோன்று மெதுவான கற்றல் திறன் உள்ள மாணவர்களுக்கு தனியாக பாடத்திட்டங்கள் கற்பிக்கலாம். 10, 11, 12 ஆகிய வகுப்புகளுக்கு ஹைடெக் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இன்றைக்கு இருக்கின்ற தொழில்நுட்பத்தை தெரிந்து கொள்வதற்கு ஸ்மார்ட் வகுப்புகள் கொண்டு வரப்பட்டுள்ளது. உலகத்தில் ஏதாவது ஒரு செய்தி வந்தால் அதனை ஒரே வாரத்தில் என்ன என்பதை தெரிந்து கொள்ளும் அளவிற்கு தொழில்நுட்பத்தை தமிழ்நாடு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது மிகப்பெரிய பெருமை.

10, 11, 12 ஆம் வகுப்புகளில் பள்ளிகளில் நன்கு பயிலும் மாணவர்கள் பொது தேர்வுகளில் மதிப்பெண் குறைவாக பெறுகின்றனர். இதற்கு காரணம் கேள்விகளை கொஞ்சம் மாற்றி கேட்டாலும் கூட சரிவர புரிந்து கொள்ளாமல் செயல்படுவதே. ஆகவே ஆசிரியர்கள் நாம்தான் அவர்களின் புரிந்து கொள்ளும் திறனை மேம்படுத்த வேண்டும். பாடம் சொல்லித் தரும் போதே அதை விளையாட்டு வடிவிலோ, கதை வடிவிலோ மாணவர்களுக்கு எப்படி சொல்லித் தர வேண்டும் என முடிவு செய்ய வேண்டும்.

ஆசிரியர் பணி சாதாரண பணி அல்ல. ஒன்றாம் வகுப்பில் வெற்று காகிதமாக சேரும் மாணவர்களை பன்னிரண்டாம் வகுப்பு முடித்து செல்லும்போது திறந்த புத்தகமாக மாற்றக்கூடிய மிகப் பெரிய பொறுப்பினை செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த கற்றல் அடைவு அறிக்கை மூலமாக எந்த வகுப்பில் நாம் பின் தங்கியுள்ளோம், எவ்விதமான கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன, மாணவ மாணவியர்களுக்கு எப்படி நேரடி கேள்விகள் கேட்கலாம், கேள்விகளை கேட்க மாணவர்களை எவ்வாறு தயார் படுத்தலாம், மாணவர்கள் புரிதலோடு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஆசிரியர்கள் தான் எடுத்துரைக்க வேண்டும்.

### உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்!

தமிழ்நாடு முதலமைச்சர் தொழில்நுட்ப ரீதியாக நல்ல வளர்ச்சியை செயல்படுத்தியுள்ளார்கள். நடந்து முடிந்த கூட்டத்தொடரில் ரூபாய் 65 கோடி மதிப்பீட்டில் 2676 பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏற்கனவே இருக்கின்ற 850 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் கண்டறிந்து அவற்றை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுமார் ரூபாய் 160 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2000 பள்ளிகள் புதிதாக உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. ஆகையால் அனைத்து விதத்திலும் பள்ளிகள் எவ்வாறு செயல்படுவது என தலைமையகத்தில் இருந்தே கண்காணிக்க முடியும். ஆனால் ஆசிரியராக எவ்வாறு செயலாற்ற முடியும் என்று உணர்வுபூர்வமாக மாணவர்களை புரிந்து கொண்டு அவர்களுக்கு கல்வி புகட்ட வேண்டும். இவற்றை ஆசிரியர்கள் சரிவர செய்து வருகின்றனரா என்பதை தலைமையாசிரியர்கள் அவ்வப்போது ஆய்வுக்கூட்டங்கள் மற்றும் நேரடி ஆய்வு மேற்கொண்டு கண்காணிக்க வேண்டும்.

பத்திரிகை துறையை சார்ந்து ஏதாவது செய்தி வருமாயின் உடனடியாக அதை சார்ந்து என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவற்றை முதன்மை கல்வி அலுவலர் மூலம் எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். தெரியப்படுத்தினால் அடுத்த நிமிடமே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு இல்லை என சில இடங்களில் தெரிய வருகிறது. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற பள்ளிக்கல்வி துறையின் திட்டங்கள் அனைத்தும் நீங்கள் தான் பெற்றோர்களிடம் தெரிவித்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் நேரடியாக வீட்டிற்கு சென்று இடைநிற்றல் மாணவர்களை திரும்ப அழைத்து வந்து பள்ளியில் சேர்க்க வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு முழுவதும் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் பத்தாயிரம் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாம்கள் நடைபெறும் இடங்களின் அருகில் உள்ள பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் முகாம்களுக்கு சென்று அரசு சார்பாக பயனாளிகளுக்கு எவ்வகையான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை பார்வையிட்டு, பொதுமக்களுக்கு பள்ளி கல்வித்துறையின் சார்பில் வழங்கப்படும் திட்டங்களை தெரிவிக்க வேண்டும்.

### மாதிரித் தேர்வுகள்!

மாதிரி தேர்வுகள் அந்தந்த பள்ளிகளிலேயே நடத்திக் கொள்ளலாம். அடுத்த ஆண்டு கற்றல் அடைவு அறிக்கை மூலமாக நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் 10, 11, 12 ஆகிய அனைத்து வகுப்புகளிலும் முன்னேறிய மாவட்டமாக செங்கல்பட்டு மாவட்டம் அமைய வேண்டும் என வலியுறுத்துகிறேன். பொள்ளாச்சியில் உள்ள சாந்தாமணி என்ற ஆசிரியர் இரண்டு கண்களும் இழந்த பார்வையற்ற மாற்றுதிறன் உடைய ஆசிரியர். மிகவும் கடினமான பாடங்களை கூட அவர் எளிமையான முறையில் மாணவர்களுக்கு எடுத்துரைக்க வல்லவர். அவற்றை வீடியோவாக எடுத்து அனைவரும் பயன் பெற வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். இது போன்ற தமிழகத்தில் ஆசிரியர்களுக்கு நிகராக வேறு எவரையும் ஒப்பிட முடியாது.

அதேபோன்று நீங்களும் புதிய முயற்சியாக என்ன செய்யலாம் என்பதை யோசித்து செயல்பட வேண்டும். பாடம் நடத்தும் பொழுது பாடத்திட்டத்துடன் சேர்த்து அறத்தினையும் கற்பிக்க வல்ல ஆசிரியர்கள் திகழ்கிறார்கள். குழந்தைகளின் பிஞ்சு மனதில் நீங்கள் சொல்லித் தருகின்ற பாடங்கள் அனைத்தும் அப்படியே பதிய வேண்டும். சமூக அறிவு விழிப்புணர்வு எப்படி சொல்லித் தரப் போகிறோம் என்பதை மனதில் வையுங்கள். அனைத்து மாவட்டத்திற்கு சென்று இதுபோன்ற ஆய்வுக் கூட்டங்கள் நடத்தும் பொழுது சில ஆசிரியர்கள் கூறும் கருத்துக்களை நாங்கள் உள்வாங்கி கொள்கிறோம். திறன் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய போது அதற்கான கோரிக்கையில் எடுத்துரைத்ததே. ஆசிரியர்களே, அடுத்த முறை வரும்பொழுது செங்கல்பட்டு மாவட்டத்தை பொறுத்தவரையில் பொதுத் தேர்விலும் சரி, கற்றல் அடைவு அறிக்கையிலும் சரி முன்னேறிய மாவட்டம் என்கிற நல்ல பெயரை பெற வேண்டும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் சித்தாமூர், இலத்தூர், அச்சரப்பாக்கம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் நல்ல முறையில் செயலாற்றி உள்ளார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். திருக்கழுக்குன்றம் காட்டாங்கொளத்தூர் இன்னும் முன்னேறிட வேண்டும். மதுராந்தகம், திருப்போரூர், புனித தோமையார் மலை ஆகிய ஒன்றியங்களில் இன்னும் உங்களுடைய முயற்சிகளை மேம்படுத்தி கைகொடுத்தீர்களானால் செங்கல்பட்டு மாவட்டம் தேர்ச்சி விகிதத்தில் ஒரு முன்னேறிய மாவட்டமாக திகழும். நல்ல செயலாற்றக்கூடிய ஒன்றியங்களில் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை முன்மாதிரியாக வைத்து மற்ற ஒன்றியங்களில் செயல்படுத்த வேண்டும். சென்னையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டங்களில் தமிழ்நாட்டில் எத்தனை பள்ளிகள் உள்ளது, உட்கட்டமைப்பு வசதிகள் எத்தனை பள்ளிகளுக்கு மேற்கொள்ள வேண்டும், எத்தனை பள்ளிகளில் கட்டுமான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, மாணவர் சேர்க்கை விகிதம் ஆகியவை கலந்தாலோ சிக்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொது தேர்வு முடிவுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இது மட்டுமல்லாமல் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு என்னென்ன தேவை ஆகியவை கேட்டறிந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிந்த இரண்டு நாட்களிலேயே அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வு கூட்டம் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு, இன்றைய தினம் செங்கல்பட்டு மாவட்டத்தில் இக்கூட்டம் நடைபெற்று வருகிறது. ஆசிரியராக நீங்கள் உங்களை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்திட இவ்வாய்வு கூட்டம் ஒரு ஊன்றுகோலாக அமையும்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கற்பகம், மாவட்ட கல்வி அலுவலர் க.காமாட்சி, மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.



அமெரிக்கா வாஷிங்டனில் உள்ள "World Learning என்ற அமைப்பு இந்தியா மற்றும் அமெரிக்காவில் தொழில் பகிர்வு இடையிலான நல்லுறவை வலுப்படுத்த இந்தியாவில் உள்ள இளம் தலைவர்கள் உயர் அரசு அலுவலர்களை உள்ளடக்கிய நபர்களைக் கொண்டு இந்தியா அமெரிக்கா புரிந்துணர்வு ஒப்பந்தம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தியா மற்றும் அமெரிக்காவில் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவது குறித்து இவர்கள் கலந்துரையாடினார்கள். தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வித்துறை மூலமாக செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து இவர்கள் கேட்டறிந்து பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டனர். குறிப்பாக கொரோனா தொற்றுக்குப் பின்னர் பள்ளிக் கல்வித்துறையில் இடைநிற்றலை தவிர்த்தல், காலை சிற்றுண்டி திட்டம் மூலம் மாணாக்கர்கள் பள்ளிக்கு வருகை அதிகரிப்பு ஆகிய செயல்பாடுகளை கேட்டறிந்து பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டனர்.

## வில்லியனூர் தொகுதியில்

# ரூ.34 லட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள்

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார் !

புதுச்சேரி, ஜுலை 17-

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதியில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் சாலைகள், கழிவுநீர் வாய்க்கால்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட திருவள்ளுவர் நகர் விரிவாக்கம் பகுதியில் ரூ. 19 லட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டில் பக்கவாட்டு கழிவு நீர் வாய்க்கால் உடன் கூடிய தார் சாலை மற்றும் ரமேஷ் நகர் மற்றும் ஆதீஷ்வரா நகர் ஆகிய பகுதிகளில் ரூ. 14 லட்சத்து 56 ஆயிரம் மதிப்பீட்டில் மண் சாலை அமைக்கும் பணிகளுக்கான நிகழ்ச்சி இன்று காலை நடந்தது.

இதில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு, சாலைகள் அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிகளில், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், இளநிலைப் பொறியாளர் சத்தியநாராயணா, திருவள்ளுவர் நகர் ஊர் முக்கியஸ்தர்கள் சூசை ராஜ், சிவபாலன், ஜேசப்பா, சண்முகம், ரவிச்சந்திரன், தனஞ்செழியன், சௌரிராஜன், இருதயராஜ், மந்திரி குமார், ஜரம், கிருஷ்ணராஜ், வெண்ணிலா, தாமஸ், கமல் ராஜ், கிஷோர், செல்வ லிங்கம், சுகுமாரன், ரமேஷ் நகர் மற்றும் ஆதீசுவரர் நகர் பூமி பூஜையில் கலந்து கொண்ட ஊர் முக்கியஸ்தர் கள் சரவணன், ராமதாஸ், ரவி, சேகர், முத்து, கோதண்டம், அன்பு, முருகன், ஜெய்சங்கர், கமலா, தமிழரசி, ஜெகதீஸ்வரி, நூறு நிஷா, சாந்தி, லட்சுமி, சைபுன் மற்றும் தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, தர்மராஜ், வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், தொமுச தலைவர் அங்காளன், வர்த்தக அணி துணை அமைப்பாளர் சரவணன், விவசாய அணி துணை அமைப்பாளர்கள் ராமதாஸ், கோபி, வர்த்தக அணி துணைத்தலைவர் ஆஜ்பாய், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் தேசிகன், ஆதிதிராவிடர் அணி துணைத் தலைவர் கதிரவன், தொகுதி துணை செயலாளர்கள் அரிகிருஷ்ணன், ஜெகன்மோகன், தொகுதி செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், கிளைக் கழக நிர்வாகிகள் சபரிநாதன், அன்பழகன், சிவகுமார், ஜெயபால், அஞ்சா புலி, அன்பரசன், அன்பு நிதி, முருகன், ஜனா, மில்ட்ரி முருகன் , சரவணன், சேகர், சுரேஷ், வீர கண்ணு, சுல்தான், கமல் பாஷா, வாசு, சேகர், திலகர்,கலைமணி, முத்து, கோதண்டம், ராஜேந்திரன், அன்பு, கோவிந்தராஜ்,ரகு, மணி, மோகன், ராமஜெயம், ஐயனார், பாலு, லூர்து நாதன், புகாரி, நடராஜன், பாலு, ராமன், விஜய், சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட திருத்தணி தொகுதி பொதட்டூர்பேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பொதுமக்கள் வழங்கிய மனுக்களை உடனடியாக நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அதிகாரியிடம் அறிவுறுத்தினர் முகாமில் திருத்தணி கோட்டாட்சியர் கனிமொழி, பள்ளிப்பட்டு வட்டாட்சியர் பாரதி, ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் டி. ஆர். கே.பாபு, ஜி.ரவீந்தரா, என்.கிருஷ்ணன், ஓ.ஏ.நாகலிங்கம், இ.கே.உதயசூரியன், தா.சுகுமார், சிவா குமார், அலுவலர் உட்பட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மீஞ்சூர் நகர பாஜக வர்த்தக அணி தலைவர் லோகேஷ் உள்பட 20 மேற்பட்ட பாஜகவினர் மற்றும் மீஞ்சூர் வடக்கு ஒன்றிய சின்ன மாங்கொடு அதிமுக கிளைச் செயலாளர் தேவன் உள்பட 20க்கும் மேற்பட்டோர் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள். உடன் முன்னாள் பேரூர் கழக செயலாளர் நா.மோகன்ராஜ் முன்னாள் மாவட்ட கழக பிரதிநிதி பா.து.தமிழரசன் உள்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.



பொதுமக்களின் வீடுகளுக்கு அரசு அலுவலர்கள் சென்று அவர்களின் குறைகளுக்கு தீர்வு காணுகிற உன்னத திட்டமான "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை நேற்று (16.07.2025) காஞ்சிபுரம் ஒன்றியம், கோனேரிக்குப்பம் ஊராட்சி, இந்திரா நகர் பகுதியில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து, பொதுமக்களிடம் மனுக்களை பெறும் அரங்குகளை பார்வையிட்டார். அதுபோது ஒன்றியக்குழு பெருந்தலைவர் மலர்கொடி குமார், ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், எஸ்.வி. ரமேஷ், சி. ராதாகிருஷ்ணன், பி.எம்.நீலகண்டன், எஸ். தமிழ்செல்வன், நவீன், சைலஜா சேகர், ஆதிலட்சுமி ரவி, ரவி, ராஜன்பாபு, வில்வநாதன், வீரராகவன், மாதவன், கார்த்தி, லோகேஷ், பூவரசன், புருசோதம்மன், அனைத்து துறை அரசு அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.